மாண்புமிகு திரு.செ. மாதவன் : உற்பத்திச் செலவு அதிகம் என்பது தான் காரணம் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேட்டி, சட்டை துவைப்பதற்குப் பயன்படும் சோப்புபற்றிக் குறிப்பிடு கிறார்கள். டிட்டர்ஜண்ட் சரியாகக் கிடைக்காதது சோப் விலை உயர் வுக்குக் காரணமாக இருக்கலாம்.

Mudumalai Sanctuary.

*468 Q.—Thiru N.K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state.

(*a*) whether it is a fact that the Government propose to prepare a Master Plan for Mudumalai Sanctuary ; and

(*b*) if so, the details thereof ?

[முற்பகல் 9-30]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நமது மாநிலத்தில் உள்ள முதுமலை, கர்நாடக மாநிலத்தில் அதை ஒட்டியுள்ள பந்திபூர், கேரள மாநிலத்தில் உள்ள வயநாடு ஆகிய மூன்று பகுதிகளையும் ஒன்றாக இணைத்து மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று ரூ. 11,52,61,100 இல் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : முதுமலைக் காட்டில் காட்டுப் பன்றிகள், யானைகள், நரிகள் போன்றவைதானே இருக்கின்றன. இந்த மூன்று பகுதிகளையும் இணைப்பதன் மூலம் எவ்வாறு அதிகப்படியான மிருகங்களை வளர்க்க முடியும் என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்த மூன்றும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து இணைந்திருக்கிற பகுதி—தமிழ்நாட்டின் பகுதி முடிந்த வுடன் அதைத் தொடர்ந்தே இந்தப் பகுதிகள் இருக்கின்றன. ஆகவே தான் இதை பெரிய திட்டமாக்கி—பல்வேறு சிறப்பு அம்சங்கள் உள்ளடங்கிய திட்டமாக உருவாக்கியிருக்கிறார்கள். இத்திட்டத்தின் கீழ் உள்ள மரங்களை வெட்டாமல் அடர்த்தியான காடுகளை வளரவிட்டால் மிருகங்கள் அதிகமாக வளர்வதற்கும் பாதுகாப்பாக இருக்கும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, காடுகளை அழிப்பது மிருகங்களின் வாழ்க்கைக்குக் கஷ்டமாக இருக்கிற காரணத்தினால் காடு களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? இந்த மூன்று பகுதிகளையும் இணைக்கும் சிறப்புத் திட்டத்தை 11 கோடிக்கு தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பியிருப்பதாகச் சொன்னார்கள், இதற்கு மத்திய அரசிடம் இருந்து ஏதாவது பதில் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இந்தத் திட்டம் தென் மாநிலங்களுடைய சுற்றுலாத்துறை அமைச்சர்களுடைய மகாநாட்டில் 1971ஆம் ஆண்டு பேசப்பட்டது. மத்திய சுற்றுலாத்துறை அமைச்சரும் தன் சம்மதத்தைத் தெரிவித்து இந்த மூன்று மாநில தலைமைச் செயலாளர்கள் கலந்து ஆலோசித்து மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் தான் இந்தத் திட்டம் நிபுணர்களால் உருவாக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு நிதி உதவி தருவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

திரு. ஈ. எம். நடராசன் : முதுமலைப் பகுதியை ஒட்டியிருக்கிற சத்திய மங்கலம், பர்கூர் பகுதிகளிலும் காட்டு யானைகள், கரடிகள் நிறைய இருக்கின்றன. அத்துடன் இவற்றையும் சேர்க்க முடியுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : உடனடியாக எல்லாப் பகுதிகளையும் சரணாலயங்களாக ஆக்க இயலாது. புதியதாக ஆனைமலைப் பகுதியை எடுத்திருக்கிறோம். இப்போது 6 சரணாலயங்கள் இருக்கின்றன. அதை ஏழு, எட்டு என்று ஆக்க வேண்டுமென்றால் அதற்குரிய சாத்தியக் கூறு இருக்குமானால் கவனிக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : நம்முடைய அமைச்சர் கூறுகின்ற இந்தத் திட்டம் தென் மாநிலங்களுக்கே சிறப்பு வாய்ந்த திட்டமாகும். மத்திய அரசாங்கம் இதற்கு அனுமதி வழங்கவில்லை என்றால் தென் மாநிலங்களே சேர்ந்து இந்தத் திட்டத்தை வெற்றிபெறச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எடுத்தவுடன் நெகடிவ் அப்ரோச்சில் ஒரு பிரச்சினையை அணுகுவதில் பிரயோசனம் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : இந்தச் சிறப்புத் திட்டத்திற்கு 11 கோடி செலவு செய்கிறோம் என்றாலும் மிருகங்கள் இல்லாவிட்டால் என்ன பிரயோசனம்? என்னென்ன மிருகங்கள் இங்கே வளர்க்கப்படும் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை என்று இல்லை. எதிர் பார்க்கிற அளவுக்கு இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். காட்டு எருமைக்கூட்டம், யானைகள், சிறுத்தைப் புலி ஆகியவை முதுமலைக் காட்டிலேயே இருக்கின்றன. இன்னும் இந்த மூன்று பகுதிகளையும் இணைத்து அடர்த்தியான காடுகளை வளரவிட்டால் அதிக அளவுக்கு மிருகங்கள் விருத்தியாகும் என்றுதான் இந்தச் சிறப்புத் திட்டம் அமைக்கப்படுகிறது.

திரு. த. சோனையா : முதுமலைக் காட்டில் இருக்கிற மிருகங்களோடு வெளியில் இருந்து சில மிருகங்களைக் கொண்டுவந்து விட்டு படம் எடுக்கிறார்களே, அப்படிப் படம் எடுக்க அரசாங்கம் அனுமதி வழங்குகிறதா? அதற்கு ஏதாவது கட்டணம் விதிக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அனுமதியும் பெற வேண்டும், கட்டணமும் செலுத்த வேண்டும்.

திரு. தொ. ப. சீனிவாசன் : முதுமலைப் பகுதியில் அதிகமான யானைக்கூட்டம் இருக்கிறது. மேலும் பல மிருகங்கள் இருக்கின்றன. அவற்றைப் பார்க்க வேண்டுமென்றால் காலையில்தான் பார்க்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் இரவு அங்கே தங்க விடுதி வசதி மிகக் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதை விரிவாக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: வசதி குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்றுதான் இந்தச் சிறப்புத் திட்டம் உருவாக்கப் படுகிறது.

திரு. கே. எ. வகாப் : இந்த முதுமலை, பந்திபூர், வயநாடு ஆகிய ஒவ்வொன்றிலும் இன்றைக்கு என்ன மிருகங்கள் எந்த அளவுக்கு இருக் கின்றன என்பது தனியாகக் கணக்கிடப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் அங்குள்ள மிருகங்கள் இங்கு வந்தோ, இங்குள்ளவை அங்கு சென்றோ குட்டி போடுகிறபோது—என்னுடையது உன்னுடையது என்கிற தகராறு ஏற்பட இடம் ஏற்படுமே, அதைத் தவிர்க்க இப்போதே கணக்கிடப்பட்டிருக் கிறதா?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: புதியதாக ஒன்றும் பிரச்சினை வருவதற்கில்லை. இப்போதே அந்தப் பிரச்சினை இருக்கிறது.

Sales Tax on Aviation fuel.

*469 Q.—Thiru N.K. PALANISAMY:—Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether the Centre has requested the State to reduce the Sales Tax on Aviation fuel during April, 1974 ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: விமானங்களுக்கு விற்கப்படும் எண்ணெய்க்கு விற்பனை வரியை ரத்து செய்யவேண்டுமென்று 1—10—1973-இல் மத்திய அரசு கேட்டுக்கொண்டது. அதனால் ஏற்படுகிற இழப்புக்கு இழப்பீட்டுத் தொகை தருவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளது. நமது அரசு அதனைப் பரிசீலனை செய்து 24—4—1974 முதல் விற்பனை வரியை ரத்து செய்ய ஒப்புக்கொண்டுள்ளது.

திரு. என்.கே. பழனிசாமி: இதன் காரணமாக எவ்வளவு இழப்பு? எவ்வளவு பணம் மத்திய சர்க்காரில் இருந்து நமக்குக் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன்: சுமார் 13 லட்சம் வரவேண்டிய கணக்கு இருக்கிறது.